முழுப்பதிப்புரிமையுடையது.

TP.NO - 0741819705



JAFFNA EDUCATION
YouTube channel

2

தரம் - 5 புலமைப்பரிசில் விசேட மாதிரிப்பரீட்சை - 2022

வினாத்தாள் I

சுட்டெண் :-.....

ஒரு மணித்தியாலம்

ஆசிரியர் -
P.A.சசிகுமார்- B.A(Hon) .B.Ed(Hon).PGDE(1st class). M.Ed(1stclass).Dip.in.Primary(Merid). SLEAS (Primary)

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தம் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
பெற்றோர்	
ஆசிரியர்	

www.jkedu.lk

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

- **கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து 1, 2 ஆகிய வினாக்களுக்கு விடை தருக**


01. பின்வரும் உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது அந்த உருவைத் தெரிவு செய்க.



(1)




(2)




(3)


02. உண்மையில் நிகழக்கூடிய சம்பவத்தைக் காட்டும் உருவாக அமைவது எது?



(1)



(2)



(3)

03. குறித்த பிராணிகளை மிகப் பொருத்தமான முறையில் இரண்டை ஒரு கூட்டமாகவும் மூன்றை ஒரு கூட்டமாகவும் தொகுதி ஆக்கும்போது இரண்டின் கூட்டத்தில் அடங்குபவை எவை?












(1) முயல், ஆடு (2) மான், ஆடு (3) குதிரை, பூனை

04. ஒன்றைப் பயன்படுத்துவதற்கு மற்றொன்றும் மிகவும் அவசியமானது எனக் கருதும் இரண்டு பொருட்களும் எவை?



(1) A,D உம் C,F உம் (2) B,E உம் A,F உம் (3) C,A உம் E,B உம்

05. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்றிற்கு மாத்திரம் பொருத்தமான கூற்று எது?








(1) ஒளி தரும் *(2)* பூமியைச் சுற்றும் *(3)* இரவில் தெரியும்

www.kedu.lk


06. கீழே ஆங்கில எழுத்துக்கள் A தொடக்கம் P வரை எழுதப்பட்ட அட்டைகள் ஏதோ ஒரு கோல ஒழுங்கில் அடுக்கி வைக்கப்பட்டு நான்கு குவியல்களாகத் தரப்பட்டுள்ளன.




ஒவ்வொரு குவியலிலிருந்தும் ஒரு அட்டை வீதம் எடுத்து ஆக்கக்கூடிய ஆங்கில எழுத்துக்களாக அமைவது எது?

(1) D,G,L,J *(2)* M,K,F,C *(3)* B,G,O,R

07. கீழே மூன்று முக்கோணிகள் தரப்பட்டுள்ளன.



இந்த முக்கோணிகள் மூன்றையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உரு எது?



(1) (2) (3)

08. உருவில் A,B,C ஆகிய கடிகாரங்களில் மூன்று நேரங்கள் காட்டப்படும் சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன. இந்தக் கடிகாரங்கள் காட்டும் நேரங்கள் பற்றிய சரியான கூற்று எது?




A B C

(1) கடிகாரம் A காட்டும் நேரம் கடிகாரம் C காட்டும் நேரத்திலும் இரு மடங்காகும்.


(2) கடிகாரம் C காட்டும் நேரம் கடிகாரம் A காட்டும் நேரத்திலும் இரு மடங்காகும்.

(3) கடிகாரம் A காட்டும் நேரம் கடிகாரம் B காட்டும் நேரத்திலும் மூன்று மடங்காகும்.

09. உரு *1* இல் தரப்பட்டுள்ள உருவானது தனித்தனி ஈர்க்குக் குச்சிகளினால் ஆக்கப்பட்டதாகும். இதில் குறைந்தது எத்தனை ஈர்க்குக் குச்சிகளை எடுத்து இடம் மாற்றுவதன் மூலம் உரு *2* இனைப்போல் ஆக்கமுடியும்?



உரு.*1*



உரு.*2*

(1) 2 *(2) 3* *(3) 4*

10. ஒவ்வொரு வீட்டிலும் நானிருப்பேன்.
உறவுகள் அனைத்தையும் இணைத்திடுவேன்.
பெரியவர் சிறியவர் பேதமின்றி
நன்மை தீமை நான் கொடுப்பேன். இந்தப் பாடலின் கருத்து மிகச் சரியாகப் பொருந்துவது.

(1) கணிப்பொறிக்கு *(2)* தொலைபேசிக்கு *(3)* தொலைக்காட்சிக்கு


www.ikedu.lk

11. சூழல் நேயமற்ற வாகனங்களின் பாவனை அதிகரிப்பானது சூழல் மாசடைவதற்கும், எரிபொருள் பற்றாக்குறைக்கும், வீதி விபத்திற்கும் காரணமாய் அமைந்துள்ளது. வாகனங்களின் அதிகளவான பாவனையினால் சுற்றுப்புறச் சூழலையும் எமது ஆரோக்கியத்தையும் நாமே கெடுத்து வருகின்றோம்.
மேலே தரப்பட்ட கூற்றுக்கள் உணர்த்துவது.

(1) வாகனங்களின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.
(2) எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என்பதாகும்.
(3) வாகனங்களினால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றியதாகும்.

12. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் 1 – 12 வரை இலக்கமிடப்பட்டுள்ளன. இவற்றில் சிவப்பு, பச்சை, மஞ்சள் நிற வாகனங்கள் சம அளவில் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 12,10,8,6 ஆகிய இலக்கமிடப்பட்ட இடங்களில் பச்சை நிற வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. சிவப்பு நிற வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 24 எனின், மஞ்சள் நிற வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் எவை?


(1) 4,5,9,1 (2) 1,9,5,3 (3) 11,5,2,1


13. 


அருகே உள்ள படத்தில் அலுவலகத்திலிருந்து காரில் புறப்பட்ட அமீர் நாற்சந்தியில் வலது பக்கம் திரும்பி வைத்தியசாலை நோக்கிச் செல்கின்றார். பஸ் வண்டியில் புறப்பட்ட அமலா நாற்சந்தியில் வலது பக்கம் திரும்பி பாடசாலை நோக்கிச் செல்கின்றார். மோட்டார்சைக்கிளில் புறப்பட்ட அகர்சன் நாற்சந்தியில் வலது பக்கம் திரும்பி சந்தை நோக்கிச் செல்கின்றார். எனின், அமீர் இடது பக்கம் திரும்பியிருந்தால் செல்லக்கூடிய இடம் எது?

(1) பாடசாலை *(2) வைத்தியசாலை* *(3) சந்தை*

14. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் எது?









(1) 19
(2) 49
(3) 91

15. மரதன் ஓட்டப்போட்டி ஒன்றில் தர்சன், சுரேஸ், கோபி ஆகியோர் முறையே 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களில் ஓடிக்கொண்டிருந்தனர். போட்டி முடிவடையும் தருணத்திற்கு முன்னர் கோபி 2ஆம் இடத்தை முந்திச் சென்ற அதேநேரம் முதலாம் இடத்தில் ஓடிக்கொண்டிருந்தவர் 3ஆம் இடத்தைப் பெற்றுப் போட்டியை நிறைவு செய்தார் எனின், போட்டியை நிறைவு செய்த ஒழுங்காக அமைவது.


(1) தர்சன், சுரேஸ், கோபி (2) சுரேஸ், கோபி, தர்சன் (3) கோபி, சுரேஸ், தர்சன்

16. 

அருகில் தரப்பட்டுள்ள உருவினை அம்புக்குறி காட்டும் திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் எது?


(1)


(2)


(3)

17. குடும்பமொன்றில் உள்ள பிள்ளைகளில் வினோ என்பவர் எனக்கு சகோதரர்களும் சகோதரிகளும் சம எண்ணிக்கையில் இருப்பதாகக் கூறினார். அருள் என்பவரும் எனக்கும் சகோதரர்களும் சகோதரிகளும் சம எண்ணிக்கையில் இருப்பதாகக் கூறினார். முரளி என்பவரும் எனக்கும் சகோதரர்களும் சகோதரிகளும் சம எண்ணிக்கையில் இருப்பதாகக் கூறினார். எனின் அக் குடும்பத்தில் ஆகக் குறைந்தது எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

(1) 3 *(2) 5* *(3) 6*

www.ikeou.lk

18. 

சிறுவர் பூங்கா ஒன்றில் ஐந்து டயர்கள் படத்தில் காட்டியவாறு நடப்பட்டிருந்தன. மாணவர்கள் ஒரு டயருக்குள் புகுந்து ஏனைய நான்கு டயர்களிலும் ஒன்றினால் வெளியேற முடியும். சிறுவன் ஒருவன் ஒரு டயருக்குள் புகுந்து வெளியேறத்தக்க ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட எத்தனை விதங்கள் உள்ளன?

(1) 15 (2) 17 (3) 20

19. தந்தை ஒருவர் தனது பிள்ளைகளான நிசா, யாமினி, சித்திரா ஆகிய மூவருக்கும் ஒரு தொகைப் பணத்தைப் பகிர்ந்தளித்தார். யாமினியை விட இருவருக்கு அதிக பணம் கிடைத்தது. சித்திராவை விட மற்றைய இருவருக்கும் குறைந்த பணமே கிடைத்தது. இதற்கேற்ப பணம் அதிகரிக்கும் ஒழுங்குமுறைக்கமைய அவர்கள் மூவரும்.

(1) நிசா, சித்திரா, யாமினி (2) சித்திரா, நிசா, யாமனி (3) யாமினி, நிசா, சித்திரா

20. ஒரு விளையாட்டு மைதானத்தில் பெண்களின் எண்ணிக்கை அங்கிருந்த குழந்தைகளின் எண்ணிக்கையிலும் இரு மடங்காகும். ஆண்களின் எண்ணிக்கை பெண்களின் எண்ணிக்கையிலும் இரு மடங்காகும். இதன்படி அங்கிருந்த பெண்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 49 *(2) 28* *(3) 17*

21. 2, 4, 10, 8, 6, 12 இங்குள்ள ஆறு இலக்கங்களையும் ஏறு வரிசையில் ஒழுங்குபடுத்துவதற்கு குறைந்தது எத்தனை இலக்கங்களின் இடங்களை இடம் மாற்ற வேண்டும்?

(1) 4 *(2) 3* *(3) 2*

22. ஒரு புத்தகத்தில் 25 தாள்கள் உள்ளன. அப்புத்தகத்தைக் கமலன் ஒரு நாளுக்கு 3 பக்கங்கள் வீதம் சனிக்கிழமை ஒன்றில் வாசிக்கத் தொடங்கினான். இடையில் 2 நாட்கள் 2 பக்கங்கள் வீதம் அவனால் வாசிக்க முடியவில்லை எனின் அப்புத்தகத்தை வாசித்து முடிக்க அவனுக்கு எடுத்த நாட்கள் எத்தனை?

(1) 16 நாட்கள் *(2) 18 நாட்கள்* *(3) 15 நாட்கள்*

23. பாடசாலையொன்றின் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான வகுப்புக்களின் கதவுகளுக்கான திறப்புக்கள் குறித்த சட்டகத்தில் 1,2,3,4,5 என இலக்கம் இடப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.


5
4
3
2
1

- 4 ஆவது சட்டகத்தில் தரம் 2 வகுப்பின் திறப்பு உள்ளது.
- தரம் 4 வகுப்பறைத் திறப்புள்ள சட்டகத்திலிருந்து 3 ஆவதாக உள்ள சட்டகத்தில் தரம் 3 வகுப்பறைத் திறப்புள்ளது.
- தரம் 1,5 வகுப்பறைத் திறப்புக்கள் அருகருகே சட்டகத்தில் இருப்பதில்லை.

இதற்கேற்ப 1ஆவது, 5ஆவது சட்டகத்தில் இருக்கக்கூடிய வகுப்பறைத் திறப்புகள் எவை?

(1) தரம் 1, தரம் 3 (2) தரம் 5, தரம் 3 (3) தரம் 4 , தரம் 5

24. ஓட்டப்போட்டி ஒன்றின் நான்கு சந்தர்ப்பங்களை உருக்கள் காட்டுகின்றன. இச் சந்தர்ப்பங்களை வரிசைப்படுத்தும்போது மூன்றாவது சந்தர்ப்பமாக அமைவது எது?



(1) C *(2)* B *(3)* D

www.ikeduk

25. பாடசாலை நிகழ்வொன்றில் இடியப்பம், பிட்டு, தோசை, இட்லி, வடை ஆகிய ஐந்து உணவுகளில் சிவா இரண்டு உணவுகளை உண்ணவில்லை. சபீனா மட்டும் இடியப்பத்தை உண்டாள். சிவாவைப் போல ஜானுவும் பிட்டு, தோசை என்பவற்றை உண்டாள். இதற்கேற்ப சிவா நிச்சயமாக

(1) இடியப்பம், இட்லி ஆகிய இரண்டு உணவுகளையும் உண்ணவில்லை.
(2) இடியப்பம், வடை ஆகிய இரண்டு உணவுகளையும் உண்ணவில்லை.
(3) இட்லி, வடை ஆகிய உணவுகளில் ஒன்றை உண்ணவில்லை.


26. நிரையொன்றில் 17 மாணவர்கள் கதிரையில் அமர்ந்துள்ளனர். மயூரி அவள் இருக்கும் இடத்தின் இடப் பக்கமாக ஐந்து கதிரைகளைக் கடந்து இடம் மாறி இருந்தாள். அவள் இப்போது இருப்பது அவளின் இடது கைப்பக்கம் ஆரம்பத்தில் இருந்து 8 ஆவது இடத்திலாகும். அவள் ஆரம்பத்தில் இருந்த இடத்தில் அவளின் இடது பக்கத்தில் எத்தனை மாணவர்கள் இருந்தார்கள்?

(1) 19 (2) 14 (3) 13

27. வாண வேடிக்கை நிகழ்வு ஒன்றின்போது படார்....மடார்.....சடார்.....தடார் என அடுத்தடுத்து வானத்தில் வெடிகள் வெடித்துச் சிதறின. ஒரு முறையில் மூன்று வெடிகள் வெடிப்பதைப் பார்ப்பதற்கு எடுக்கும் ஆகக் குறைந்த நேரம் 12 நிமிடங்களாகும். அவ்வாறு ஒரு முறையில் ஆறு தடவை வெடிகள் வெடிப்பதைப் பார்ப்பதற்கு எடுக்கும் ஆகக் குறைந்த நேரம் எவ்வளவு?


(1) 30 நிமிடங்கள் (2) 36 நிமிடங்கள் (3) 24 நிமிடங்கள்

28. உருவில் கண்ணாடிக்குவளை A இல் இடப்பட்டுள்ள மூன்று இலக்கங்களையும் குவளை B ஐயும் பயன்படுத்தி குவளை C இற்கு அதே ஒழுங்கு முறையில் இருக்கும் விதத்தில் தரப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மிகக் குறைந்தது ஏழு தடவைகளில் இடம் மாற்ற முடியும்.




- ஒரு தடவையில் ஓர் இலக்கம் மட்டுமே அகற்றப்பட முடியும்.
- எப்போதும் மேலே உள்ள இலக்கமே அகற்றப்பட முடியும்.
- அகற்றப்பட்ட இலக்கத்தை கையில் வைத்திருக்காது குவளையில் இடுதல் வேண்டும்.
- குவளையில் சிறிய இலக்கத்திற்கு மேலே பெரிய இலக்கத்தை இட முடியாது.


அவ்வாறு ஏழு தடவைகளில் இடம் மாற்றும்போது மூன்றாவது தடவையில் B எனும் கண்ணாடிக் குவளையில் இலக்கங்கள் காணக்கூடிய அமைப்பு எது?



(1)



(2)




(3)

29. போட்டி ஒன்றில் வெற்றி பெற்ற வீரர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்ததுடன் நடுவர்களும் வெற்றி பெற்ற வீரர்களுக்கு மட்டும் கைலாகு கொடுத்து மகிழ்ந்தனர். இங்கு 20 கைலாகு கொடுத்தல் நிகழ்வுகள் நடைபெற்றது எனின், கைலாகு கொடுத்தவர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை எவ்வளவு?

(1) 7 (2) 5 (3) 4

www.ikeduk

30. அடைப்புக்குள் உள்ள உரு நிரையில் அடுத்து இடம்பெற வேண்டிய உரு எது?





(1)


(2)


(3)

31. பெட்டியொன்றில் 48 சவர்க்காரக் கட்டிகள் அல்லது 12 பிஸ்கட் பைக்கற்றுகளை அடுக்க இடவசதி உள்ளது. அந்தப் பெட்டியிலே 08 பிஸ்கட் பைக்கற்றுக்கள் அடுக்கப்பட்டால் மீதி இடத்தில் எத்தனை சவர்க்கார கட்டிகளை அடுக்கலாம்?

(1) 36 (2) 32 (3) 16


32.  குறித்த உருவானது புள்ளிக்கோடு காட்டும் பகுதியில் வெட்டி இரண்டு துண்டுகளாக்கப்பட்டன. தற்போது ஒரு துண்டிலுள்ள முகங்களின் எண்ணிக்கை எத்தனை?


(1) 5 (2) 6 (3) 10


33. வியாபாரி ஒருவன் மூன்று தேங்காய்களை 100 ரூபாவிற்கு வாங்கி இரண்டு தேங்காய்களை 100 ரூபாவிற்கு விற்றார். அவர் குறித்த நாளில் தேங்காய்களை விற்றதனால் 1200 ரூபாய் இலாபமும் பெற்றிருந்தார் எனின், அவர் விற்ற தேங்காய்கள் எத்தனை?


(1) 48 *(2) 24* *(3) 72*

34. அடைப்புக்குள் உள்ள நிரையில் அடுத்து இடம்பெற வேண்டிய உரு எது?




(1)


(2)


(3)

35. கீழே தரப்பட்டுள்ள மூன்று உருக்களையும் பாருங்கள்.



உரு A



உரு B



உரு C

மூன்று உருக்களிலும் இருக்கும் ஏதோவொரு பொதுப் பண்புக்கு ஏற்ப இவற்றில் இரண்டு உருக்களைச் சோடியாக்க முடியும். அந்தச் சோடி

(1) A உம் B உம் *(2)*) B உம் C உம் *(3)* A உம் C உம்

www.ikodu.lk

36. கீழே தரப்பட்ட குவளைகளில் தற்போது நீர் மட்டங்கள் ஒரே அளவில் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் எந்தக் குவளையில் அதிக நீர் இருந்திருக்க முடியும்?


(1)


(2)



(3)

37. உருவில் காணத்தக்க முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?


(1) 7

(2) 8

(3) 9



38. கோலத்திற்கேற்ப A,B ஆகியன குறிக்கப்பட்ட அடைப்புக்குப் பொருத்தமான எணகள் எவை?




(1) 8,16 *(2) 7,15* *(3) 7.16*

39. விழா ஒன்றில் சிவப்பைவிட இரண்டு மடங்கு செம்மஞ்சள் மின்குமிழ்களும், செம்மஞ்சளைவிட 4 குறைவாக பச்சை மின்குமிழ்களும், பச்சை மின்குமிழ்களைவிட 2 அதிகமாக நீலநிற மின்குமிழ்களும், நீலநிறத்தின் சரிபாதி அளவு மஞ்சள் நிற மின்குமிழ்கள் ஒளிர்ந்தன. அங்கு 10 செம்மஞ்சள் மின்குமிழ்கள் ஒளிர்ந்தன எனின் மொத்தமாக ஒளிர்ந்த மின்குமிழ்கள் எத்தனை?

(1) 23 *(2) 33* *(3) 43*

40. A, B என்னும் இரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 12 கிலோமீற்றர் ஆகும். ஒரு குறித்த நாளில் முற்பகல் 6.00 இற்கு லலித் A இலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 4 km வேகத்தில் Bயை நோக்கிச் செல்கின்றான் றொசான் அதே நேரத்தில் B இலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 2 km வேகத்தில் Aயை நோக்கிச் செல்கின்றான்.



லலித்தும் றொசானும் சந்திப்பது A யிலிருந்து எத்தனை கிலோ மீற்றர் தூரத்திலாகும்?

(1) 4 கிலோமீற்றர் *(2) 6 கிலோமீற்றர்* *(3) 8 கிலோமீற்றர்*

★★★

முற்றிலும் இலவசமாக இந்த வினாத்தளுக்கான விடைகளையும் நுட்பங்களையும் வீடியோ வடிவில் காண்பதற்கு **JAFFNA EDUCATION YouTube** தளத்தினை நாடுங்கள்

முழுப்பதிப்புரிமையுடையது

TP.NO - 0741819705



JAFFNA EDUCATION
YouTube channel

2

தரம் - 5 புலமைப்பரிசில் விசேட மாதிரிப்பரீட்சை - 2022

வினாத்தாள் II

சுட்டெண் :-.....

1 மணித்தியாலம் 15 நிமிடம்

ஆசிரியர் -
P.A.சசிகுமார் -B.A(Hon) .B.Ed(Hon).PGDE(1st class). M.Ed(1stclass),Dip.in.Primary(Merid). SLEAS

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தம் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
பெற்றோர்	
ஆசிரியர்	

www.ikeduk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

விளையாட்டுக்கள் மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. விளையாட்டினால் பெரியவர்கள், சிறியவர்களின் உடல் உறுதி அடைவதோடு மூளையும் விருத்தி அடைகின்றது. விளையாட்டு என்பது சிறந்த பொழுது போக்காகவும் அமைகின்றது. எமது முன்னோர் வாழ்க்கையின் ஓர் அம்சமாக விளையாட்டினைக் கருதியதன் காரணமாகவே கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். நோயில்லா வாழ்க்கைக்கு உடற்பயிற்சி மிக அவசியமானது. இதனாலேயே விளையாட்டானது பாடசாலைக் கல்வியுடன் இணைக்கப்பட்டுள்ளது. விளையாட்டும் கல்வியும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத வகையில் எமது நல்வாழ்வுக்குத் தேவையாக உள்ளன.

- ***பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.***

(i) மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தருபவை எவை?

……

(ii) விளையாட்டினால் எவருடைய மூளை விருத்தி அடைகின்றது?

……..

(iii) விளையாட்டினை வாழ்க்கையின் ஓர் அம்சமாகக் கருதியோர் யார்?

……..

(iv) "வலிமை" என்பதனைக் குறிப்பிடுவதற்காகப் பந்தியில் பயன்படுத்தப்பட்ட சொல் எது?

…….....

(v) நோயில்லா வாழ்க்கைக்கு அவசியமானது எது எனப் பந்தியில் குறிப்பிடப்படுகிறது?

…… ……

(vi) எமது நல்வாழ்வுக்குத் தேவையான விடயங்கள் எவை?

…….

2. கீழே தரப்பட்டுள்ள சொற்களில் எழுத்துக்கள் இடம் மாறியுள்ளன அவ் எழுத்துக்களை திருத்தி மீண்டும் சரியான சொற்களை எழுதுக.

(i) மொய்தாழி …… (ii) வீர்நீழ்ச்சி ……..

3. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

விறுவிறுவெனக் / வயல் / விரைகின்றனர் / தம் / நோக்கி / விவசாயிகள் / கலப்பையோடு

……..

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (√) எனவும் பிழையாயின் (x) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) சந்திரனில் இருவேறு தோற்றங்கள் உள்ளது. (……..)
(ii) தம்பியும் நானும் தேநீர் அருந்தினோம். (……..)
(iii) பசுக்கள் புற்றரையை நோக்கிச் செல்லும். (……)
(iv) மணமக்களை யாவரும் வாழ்த்தினார்கள். (……..)

5. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

சிறுவர்களுக்கான நாளிதழ்கள் வார இதழ்கள் மாத இதழ்கள் காலாண்டு இதழ்கள் எனப் பலதரப்பட்ட வெளியீடுகள் காணப்படும்

www.ikedu.lk

6. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

அகல உழுவதை விட ..... உழுவதே நன்று.

(ii) **பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

"கர்ணன் துரியோதனனுக்காகப் போர் புரிந்து உயிர் துறந்தான்."

.....

7. தரப்படும் மரபுத் தொடர் வெளிப்படுத்தும் கருத்தைத் தெரிந்து எழுதுக

தட்டிக் கொடுத்தல் .....

(சாக்குப் போக்குச் சொல்லுதல் / துன்பத்திலிருந்து காப்பாற்றுதல் / உற்சாகப்படுத்தல்)

8. பின்வரும் வாக்கியத்தை பெண்பால் இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக.

மருத்துவன் நோயாளிக்கு மருந்து கொடுப்பான்.

.....

9. *பின்வரும் இரட்டைக்கிளவிச் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.*

சட சட, புறு புறு, வள வள, சல சல, சிடு சிடு

(i) பாட்டி .....வென்று கதைத்தாள்.

(ii) காற்றினால் மரத்தின் கிளைகள் **.....** என முறிந்தன.

10. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து எழுதுக.

"விரைவாகக் கடதாசியை எடுங்கள்", "கடதாசியை இரு பகுதிகளாக வெட்டுங்கள்" என்பவை .....ஆகும்

அறிவித்தல் / அறிவுறுத்தல் / கட்டளை

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Transport;..... (ii) Buffalo ;.....

12. தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக

(i) sweep/I/to/help/ you ;.....

(ii) sisters / We / two / have ;..... .

14. " கெசெல் " என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

www.ikeu.lk

15. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.**

"உங்களுடைய ஊர் எங்கே?

……

16. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

7 331 ……

17. பின்வரும் எண்ணை இடப்பெறுமானத்திற்கு ஏற்ப விரித்து எழுதுக

5 824 = …….. + ……... + …….. + ……..

18. எண் கோலத்துக்கேற்ப வெற்றிடங்களில் இடம்பெற வேண்டிய எண்ணை எழுதுக.

……, ……..., 27, 31, 35

19.

8	6
3	

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

……

20. ஒரு பத்திரிகை நிறுவனத்தில் அச்சிடப்பட்ட பத்திரிகை வகைகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது

பத்திரிகை வகை	ஜனவரி	பெப்ரவரி
குழந்தைகளுக்கானது	3543	4930
பெண்மணிகளுக்கானது	4464	3632
வார இறுதி	2925	2502

(i) இரண்டு மாதங்களிலும் அச்சிடப்பட்ட வார இறுதிப் பத்திரிகைகளின் மொத்த எண்ணிக்கை?

……...

(ii) பெப்ரவரி மாதம் பெண்மணிகளுக்காக அச்சிடப்பட பத்திரிகையிலும் குழந்தைகளுக்காக அச்சிடப்பட்ட பத்திரிகைகள் எத்தனை அதிகம்?

……...

21. 624 இனை 4 இனால் பெருக்கும்போது வரும் விடை யாது? ……...

22. ஒரு சிறிய மீன் தொட்டியை நிரப்புவதற்கு 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீர் தேவை. இப்போது தொட்டியில் 1 லீற்றர் 750 மில்லிலீற்றர் நீர் மாத்திரம் உள்ளது. தொட்டியை நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?

…… l ……ml


23. ஒரு சுற்றுலாவிற்காக 67 மாணவர்களுக்கு ஒரு பேருந்து வீதம் மூன்று பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டன. சுற்றுலாவில் பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

……

24. 165 ரூபாய்க்கு ஒரு தூரியன் பழத்தையும் 90 ரூபாய்க்கு மூன்று மாம்பழங்களையும் வாங்கிய பின்னர். 500 ரூபாய்த் தாளினைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

ரூபாய்……

25.



கட்டத்தில் உள்ள பட்டங்களின் குவியலில் நான்கில் இரண்டு பங்கு (2/4) பட்டங்கள் எத்தனை?

……

www.ikeu.lk

26. ரிசானா ஒரு பந்தை 6 m 75 cm தூரத்திற்கு எறிந்தாள். நயனா பந்தை 13 m 45 cm தூரத்திற்கு எறிந்தாள். ரிசானாவிலும் பார்க்க நயனா எவ்வளவு தூரத்திற்குக் கூடுதலாக எறிந்தாள்?

……

27. வியாபாரி ஒருவர் தராசு ஒன்றின் ஒரு தட்டில் 1 kg 800 g சீனியையும் 2 படிகளையும் வைத்தார். அந்த நிறையைச் சமமாக்குவதற்கு மறு தட்டில் 3 kg படிகளையும் வைத்தார் எனின், சீனியுடன் வைத்த படிகளின் நிறை எவ்வளவு?


…… kg ……g

28. கடிகார முகத்தில் காட்டப்படும் பிற்பகல் நேரத்தை நியம நேரத்தில் தருக



……

29. *ஒரு நாளில் சந்தை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ள மரக்கறி வகைகளின் அளவுகள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.*



(i) குறித்த நாளில் எத்தனை கிலோ கிராம் லீக்ஸ் விற்பனை செய்யப்பட்டுள்ளது?

……

(ii) அதிகமாக விற்பனை செய்யப்பட்ட மரக்கறிக்கும் குறைவாக விற்பனை செய்யப்பட்ட மரக்கறிக்கும் இடையில் எத்தனை கிலோ கிராம் வித்தியாசம் காணப்படுகிறது?

……..

- ***இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.***

30. சூரிய நமஸ்காரச் செயற்பாட்டின் ஐந்தாம் படிநிலையைக் குறிக்கும் உரு எது?



(1)



(2)



(3)

31 பின்வருவனவற்றுள் சம்பல் தயாரிப்பதற்குப் பயன்படுவது எது?

(1) மரவள்ளிக் கிழங்கு *(2)* தக்காளிப் பழம் *(3)* வாழைப் பூ

32 பல வித்துக்களைக் கொண்ட பழம் எது?

(1) மர முந்திரிகை *(2)* அப்பிள் *(3)* ரம்புட்டான்

33. சமைப்பதற்கான பாத்திரங்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பொருத்தமான உலோகம் எது?

(1) இரும்பு *(2)* அலுமினியம் *(3)* தகரம்

www.jeeu.lk

34. ஊறுகாய், தயிர் போன்றவற்றை சேமித்து வைக்க மிகப் பொருத்தமான பாத்திரம் எது?

(1) கைபிடி கொண்ட பிளாத்திக்குக் கோப்பை
(2) மூடி கொண்ட உலோகத்தினால் ஆன பாத்திரம்
(3) மண்ணினால் ஆக்கப்பட்ட முட்டி

35. இலங்கையைப் பிரித்தானியர் முழுமையாகக் கைப்பற்றிய ஆண்டு எது?

(1) 1796 (2) 1815 (3) 1830

36. நீர் வர்ணங்களில் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகியனவற்றைச் சம அளவில் கலக்கும்போது உருவாகக்கூடிய நிறம் எது?

(1) ஊதா (2) கபிலம் (3) கருநீலம்

37. கால்களில் நகங்களைக் கொண்ட பிராணி அல்லாதது எது?

(1) புலி (2) மரை (3) குரங்கு

38. வல்லாரை, கீரை, அகத்தி, பொன்னாங்காணி என்பன உள்ளடங்கும் உணவுத்தொகுதி எதற்காக உணவில் சேர்க்கப்படுகிறது?

(1) வளர்ச்சிக்காக (2) பாதுகாப்பிற்காக (3) சக்திக்காக

39. ஆவணி மாதம் பூக்கும் தாவரம் எது?

(1) இலுப்பை (2) நாவல் (3) வாகை

40. தரப்படும் பாடல்களில் சேனைகளில் சேனை காப்போரை அழைக்கும் பாடல் எது?

(1) 'விடிவெள்ளி நம் விளக்கு ஐலசா விரிகடலே பள்ளிக் கூடம் .....'
(2) 'ஆனகட்டி ஏலேலப்படி சேர்குழப்பி அயிறு சம்பா ஏலேலப்படி.....'
(3) 'பச்சை வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ .....'

41.



A B C

மேலே தரப்பட்டுள்ள மூன்று கண்ணாடிக்குவளைகளில் தூய நீர் விடப்பட்டு மூன்று முட்டைகளும் உள்ளே இடப்பட்டு பரிசோதனை ஒன்று செய்யப்பட்டது. இப்பரிசோதனையின்போது எந்தக் குவளையில் நல்ல முட்டையின் சரியான நிலை காணப்படுகிறது?

(1) குவளை A இல் (2) குவளை B இல் (3) குவளை C இல்

42. 'கூறும் விடயத்தை விட அதனைக்கூறும் விதமே முக்கியமானது' ஏனையோரின் மனம் புண்படும் வகையிலான பேச்சுப்பாங்கினால் ஏற்படக்கூடிய விளைவுகளில் ஒன்றாக அமைவது எது?

(1) முரண்பாடான நடத்தை உருவாகும்.
(2) சுமுகமான உறவு நிலை உருவாகும்.
(3) தாழ்மையான நடத்தை வெளிப்படும்.

43. காலாவதித் திகதி குறிக்கப்படாமல் கடைகளில் விற்பனை செய்யும் பொருட்களின் தொகுதியில் அடங்குபவை எவை?

(1) எரிவாயு சிலிண்டர், தலைக்கவசம், முகக்கவசம்
(2) மின்குமிழ், பற்பசை, கைத் தொலைபேசி
(3) பற்தூரிகை, அப்பியாசக் கொப்பி, சுவர்க் கடிகாரம்

www.ikedu.lk


44. குறித்த ஒரு காலத்தில் மாத்திரம் உற்பத்தி செய்யக்கூடிய பழவகை எது?

(1) வாழைப்பழம் (2) திராட்சைப்பழம் (3) பப்பாசிப்பழம்

45. மின்காந்தம் ஒன்றை உருவாக்குவதற்குத் தேவையற்ற பொருள் எது?

(1) மின்கலம் (2) இரும்பாணி (3) குண்டூசி

46. உலர் மின் கலத்துடன் மின்குமிழ்களை இணைத்து தேவையான சந்தர்ப்பங்களில் மட்டும் ஒளிரச்செய்ய ஆளி (சுவிச்) ஒன்றினை அமைக்கும் பரிசோதனையின் மூன்று சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் மின் குமிழ் ஒளிராத சந்தர்ப்பம் எது?



(1) (2) (3)

47. பழைய பிளாத்திக்கு வாளி ஒன்றினை எடுத்து அதற்குள்ளே வளமான மண்ணினைப்போட்டு கத்தரிச் செடி ஒன்றினை நட்ட விமலன் அவ் வாளியின் அடிப்பக்கத்தில் சில சிறிய துளைகளை இட்டான். இதற்கான காரணமாக அமைவது எது?

(1) வேர்கள் ஓடுவதற்கு (2) மேலதிக நீர் வடிவதற்கு (3) வளி செல்வதற்கு

48. கொழுத்தப்பட்ட மெழுகுதிரி ஒன்றினை ஊசித்துளைக்கமரா மூலம் பார்க்கும்போது அதன் தீச்சுவாலை அசைவது.

(1) கீழ்நோக்கி (2) மேல்நோக்கி (3) கிடையாக

49. 'பயிர்ச்செய்கையின்போதும் 3R எண்ணக்கருவைப் பயன்படுத்துவது தற்போது வலியுறுத்தப்படுகிறது. 3R எண்ணக்கருவில் உள்ளடங்கும் விடயங்கள் எவை?

(1) பயன்பாட்டைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல், மீள் சுழற்சிப்படுத்தல்
(2) பயன்பாட்டை அதிகரித்தல், மீளப் பயன்படுத்தல், மீள் சுழற்சிப்படுத்தல்
(3) பயன்பாட்டை நிறுத்தல், மீளப் பயன்படுத்தல், மீள் சுழற்சிப்படுத்தல்

50. 'எதிரணியின் பந்தைத் தடுத்துக் கைப்பற்றி தமது பக்க பேற்றுக் கம்பத்தின் அருகில் கொண்டு செல்ல வேண்டும்……..' இது எவ் விளையாட்டில் உள்ளடங்குகிறது?

(1) வொலிபோல் (2) சிறுவர் நெற்போல் (3) காற்பந்து

51. நீர் வடிகட்டி ஒன்றை அமைக்கும்போது பயன்படுத்தும் பொருட்களை ஒழுங்கு முறையில் காட்டும் விடை எது?

(1) பரல் படை, மணல் படை, பஞ்சு
(2) மணல் படை, பரல் படை , பஞ்சு
(3) சிறுகற்கள், பெரு மணல், பஞ்சு

52. சுவாசத் தொற்று நோய்க்குள்ளான ஒருவர் செய்யக்கூடாத செயல் எது

(1) பொது இடங்களில் முகக்கவசமின்றி நடமாடுவதைத் தவிர்த்தல்
(2) பொது இடங்களில் சமூக இடைவெளி பேணுவதைத் தவிர்த்தல்
(3) பொதுமக்கள் கூடும் இடங்களிற்கு செல்வதைத் தவிர்த்தல்

53. தீங்கான பிராணிகளை அழிக்கும் பிராணி எது?

(1) கறையான் (2) மெருன் (3) கபரகொய்யன்

www.kedu.lk

54. இலை வகைகளில் வேறுபட்ட வடிவங்களைக் கொண்ட இலைகள் உள்ளடங்கும் விடையைத் தெரிவு செய்க.

(1) அகத்தி. தொட்டாற்சுருங்கி, கொவ்வை
(2) பப்பாசி, வெண்டி, ஈரப்பலா
(3) மூங்கில், கரும்பு, சோளம்

55.  படத்தில் காட்டப்பட்ட உபகரணத்தைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் எது?

(1) கப்பல்களை நிறுத்தி வைத்தல்
(2) விமானங்களை நிறுத்தி வைத்தல்
(3) பாரங்களை மேலே உயர்த்துதல்

56. தேசியக்கொடி ஏற்றுதல், தேசிய கீதத்தைப் பாடுதல் தொடர்பான சரியான கூற்று எது?

(1) தேசியக் கொடி ஏற்ற முன் தேசிய கீதம் பாட வேண்டும்.
(2) தேசியக் கொடி ஏற்றும்போது தேசிய கீதம் பாட வேண்டும்.
(3) தேசியக் கொடி ஏற்றிய பின் தேசிய கீதம் பாட வேண்டும்.

57. அரங்கிசையில் பயன்படுத்தப்படும் கஞ்சிரா எவ்வகை இசைக்கருவி ஆகும்?

(1) தோற்கருவி (2) நரம்புக்கருவி (3) துளைகருவி

58. எண்ணெய், கொழுப்பு உணவுகளை அதிகம் உண்பதால் ஏற்படக்கூடிய நோய் எது?

(1) நீரிழிவு (2) இருதய நோய் (3) சீதபேதி

59. 

அருகே காட்டப்பட்டுள்ள படத்தில் பாரமான பொருள் ஒன்றினை மேலே கொண்டு செல்லும் விதம் காட்டப்பட்டுள்ளது இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள உபகரணம் எது ?

(1) கஸ்பர் வீல் (2) கப்பி (3) பம்பரம்

60. "விண்மீன்கள் நிறைந்த வானம்" எனும் தலைப்பின் கீழ் **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொருவாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ……
……
2. ……
……
3. ……
……

★★★★

முற்றிலும் இலவசமாக இந்த வினாத்தளுக்கான விடைகளையும் நுட்பங்களையும் வீடியோ வடிவில் காண்பதற்கு **JAFFNA EDUCATION YouTube** தளத்தினை நாடுங்கள்

www.ikeduk.lk